உ

கடவுள் துணை.

# தடிக்கழுதைப்பாட்டு

## ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்தும்

அடங்கியிருக்கின்றன.


திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது



மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதராஸ். என். சி.


124

## நீதிச்சிந்துயென்னும்

# பெண்புத்திமாலை.

அன்னைத்தந்தைகளை தெய்வமென்றேதினம்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை
இன்னிலத்தில்கெட்ட துரோகியெனும்பேரை
ஏற்றுக்கொள்வாள்மூட தடிக்கழுதை. 1

சொந்தக்கணவனொரு அந்தகனானாலும்
வந்தனைசெய்திடுவாள் பதிவிரதை இல்லாமல்
சிந்தையில்வெவ்வேறு எண்ணத்தால்கணவனை
சீறித்திரிபவள்கெட்ட தடிக்கழுதை. 2

தனதுகணவன்மூட தடியனாயிருந்தாலும்
தன்மையுடனிருப்பாள் பதிவிரதை இல்லாமல்
மனதுக்கிசைந்தநல்ல மன்னனாயிருந்தாலும்
மதியாமல்பேசிடுவாள் தடிக்கழுதை. 3

மாமியாரடித்தாலும் நாஞ்செய்தகுற்றமென்று
மவுனமாயிருப்பாள் பதிவிரதை இல்லாமல்
சாமியாரைப்போல யாரையுமதியாமல்
சண்டைக்கிழுப்பவளே தடிக்கழுதை. 4

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில்
சருத்தாயிருப்பவளே பதிவிரதை இல்லாமல்

கணவனைமதியாமல் கண்டபடியழித்து
கடன்காரனுக்குவாள் தடிக்கழுதை. 5
தண்ணிக்குப்போனாலுந் தன்னடிபிசகாமல்
தலைகுனிந்துபோவாள் பதிவிரதை இல்லாமல்
என்னதொழிலாக தெருவில்வந்தாலுஞ்சண்டை
என்னதென்றோடுவாள் தடிக்கழுதை. 6
அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும்
ஆசைவையாள்நல்ல பதிவிரதை இல்லாமல்
என்னசாதியா யிருந்தாலும்புருஷர்மேல்
இச்சைகொண்டுத்திரிவாள் தடிக்கழுதை. 7
கொண்டையில்மலர்சூடி தெருவேகலுண்ணுதென்று
கூச்சத்துடனிருப்பாள் பதிவிரதை இல்லாமல்
செண்டுப்பூவானாலும் கொண்டையில்முடித்துத்
தண்டுத்தனங்கள்செய்வாள் தடிக்கழுதை. 8
கொண்டகணவன்மாமி மாமனாரடித்தாலும்
குறுக்கப்பேசாதிருப்பாள் பதிவிரதை இல்லாமல்
லண்டத்தனமாகச் சண்டைக்கிழுத்தவர்கள்
மானங்கெடுத்திடுவாள் தடிக்கழுதை. 9
காலையிலெழுந்து கணவனடிப்பணிந்து அவன்
கருத்தைப்போலேநடப்பாள் பதிவிரதை இல்லாமல்
வேலைக்கிசோம்பலாய் பாயில்படுத்தபடி
வீணபொழுதைக்கழிப்பாள் தடிக்கழுதை. 10
அங்கம்பசித்தொருவர் அய்யமென்றுவந்தால்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை இல்லாமல்

தங்கவொட்டாமலே சிரித்தெருவில்நெட்டித்
தள்ளப்போவாள்மூட தடிக்கழுதை. 11
அண்டைவீடெதிர்வீடு அருமுகமானாலும்
அகத்தைவிட்டுப்பிரியாள் பதிவிரதை இல்லாமல்
லண்டசிநேகஞ்செய்து கண்டவிடந்திரிந்து
சண்டையிழுத்திடுவாள் தடிக்கழுதை. 12
கட்டினதாலி கயிரோடிருந்தாலும்
கணவனைவெறுக்காள் பதிவிரதை இல்லாமல்
மட்டித்தடியனென்னை கட்டினநாள்முதல்
மரம்போலிருந்தேனென்பாள் தடிக்கழுதை. 13
வாசற்படிகடந்தால் வருங்குற்றநமக்கென்று
வண்மையாயுள்ளிருப்பாள் பதிவிரதை இல்லாமல்
பேசஅயல்வீடு யெங்குங்கலகத்தை
பெருகச்செய்துவருவாள் தடிக்கழுதை. 14
குடும்பங்கலையாமலே கூட்டமாயெல்லோரும்
கூடியிருக்கச்செய்திடுவாள் பதிவிரதை இல்லாமல்
நடுங்கயெல்லோரையும் பேசிகுடும்பமதை
நாலாய்க்கலைத்திடுவாள் தடிக்கழுதை. 15
அழகிலாக்கணவனாயிருந்தாலும் அவனன்றி
யன்னியரைநாடாள் பதிவிரதை இல்லாமல்
வொழுங்காயொருவன்வரக் கண்டாலவனைத்தேடி
ஒருமித்துசேர்ந்திடுவாள் தடிக்கழுதை. 16
கதிரவனுதிக்குமுன் காலைக்கடன்முடித்து
கணவனெதிர்வருவாள் பதிவிரதை இல்லாமல்

பிரதிதினமுங்கணவன் பிதட்டினாலும்பெருந்
திண்டுபோல்தூங்குவாள் தடிக்கழுதை. 17
அறஞ்செயவிரும்பென அவ்வையுரைத்தமொழி
அணுகளவும்பிசகாள் பதிவிரதை இல்லாமல்
தரும்பிச்சைசயைக்கூடத் தடுத்துவேண்டாமென்று
தானுங்கொடுக்கவொண்ணாள் தடிக்கழுதை. 18
உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்ப
துண்மையெனநடப்பாள் பதிவிரதை இல்லாமல்
கண்டபாட்டுகள் ஆட்டங்கள்பார்க்கவும்
கைவிரித்துத்திரிவாள் தடிக்கழுதை. 19
ஊருடன்பகைக்கின் வேருடன்கெடுமென்ற
உண்மையையறிந்துகொள்வாள் பதிவிரதை இல்லாமல்
ஆராகிலுஞ்சரி வாங்கள்வெளியேயென்று
அதட்டித்திரிந்திடுவாள் தடிக்கழுதை. 20
சக்களத்தியீன்ற பிள்ளையாயிருந்தாலும்
சமமாய்ப்பார்த்திருப்பாள் பதிவிரதை இல்லாமல்
மிக்கஒழுக்கமுள்ள சேயனாயிருந்தாலும்
மெலியமிரட்டிடுவாள் தடிக்கழுதை. 21
யிரப்பவர்க்குப்பிட்சை யிடவேணுமென்பதை
எண்ணிநடந்திடுவாள் பதிவிரதை இல்லாமல்
வரக்கண்டவுடனிங்கு வைத்திருக்குதோவென்று
வாதுசெய்தோட்டுவாள் தடிக்கழுதை. 22
பணிகளிருந்தாலும் அணிந்துவெளியில்வந்து
பாதையில்நடக்காள் பதிவிரதை இல்லாமல்

துணியாகிலும்ஒழுங்கா யலங்கரித்துக்கொண்டு
சொகுசாய்இரிந்திடுவாள் தடிக்கழுதை. 23
இன்னில்கடத்தையை சொன்னேன்முனிசாமி
இதைத்தெரிந்துகொள்வாள் பதிவிரதை இல்லாமல்
என்னபாட்டுஇதை அச்சிலிட்டாரென்று
என்னைப்பழிப்பவளே தடிக்கழுதை. 24

பெண்புத்திமாலை - முற்றிற்று.

---

# ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்து

## காப்பு - வெண்பா.

சீராருலகினர்தந் தீயநெறிமாற்றிப்
பேரார்நன்னெறிவிளங்கப் பேசுதற்கிங்-கேராரும்
மும்மலமும்முச்சுடரும் முப்பாலுக்கப்பாலுஞ்
செம்மலிணைத்தாளிணையே சேர்.

## கண்ணிகள்.

சீர்மல்கியசராசரமாயெழிற்
சிவமதைச்சேர்ந்தவ ளாண்பிள்ளை
உயர்தவமதிற்சார்ந்தவ ளாண்பிள்ளை
பார்வருஉடலமாம் மனமதுகொண்டு
பாவத்திலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தானந்த மாகியபரவொளி
தன்னையறிந்தவ னாண்பிள்ளை
மெய்யிற் றன்னையறிந்தவ னாண்பிள்ளை

முத்திமுதல்வனை பணியாமல்நாடோறும்,
மூடமாய்த்திரிந்தவன் வீண்பிள்ளை
மும்மலமுங்கடந்த மூர்த்தியினருள்பெற
முனைந்துதிரிந்தவ னாண்பிள்ளை
மனங் கனிந்துபரிந்தவ னாண்பிள்ளை
இம்மகிதலவாழ்வை சதமெனவெண்ணியே
யேங்கியலைந்தவன் வீண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டா நாதன்திருவடியை
நாலைத்துணிந்தவ னாண்பிள்ளை
வினை வாடப்பயந்தவ னாண்பிள்ளை
பாலினுமின்சொலாப் பாவையர்களாகிப்
பரிவுகொண்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுங்கஜேந்திரனுக்
கருளியதையறிந்தோ னாண்பிள்ளை
மறுத்திருளறவேபரிந்தோ னாண்பிள்ளை
பாதகனாய்ப்புவியில் வீணர்கடமைக்கூடி
பாதகர்களைப்பழித்தோன் வீண்பிளளை
ஆதியனாதிசோதியாய்நின்றிலங்கும்
அய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர் மெய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுணராமல் மாதரைக்கூடி
யுறக்கத்திலலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினி லிருந்துநடனமிடும்
பரமனையறிந்தவ னாண்பிள்ளை
தன் திறமையால்தெரிந்தவ னாண்பிள்ளை

வஞ்சனைசெய்மட மாதர்கள்மயக்கத்தில்
வாடிவிழிப்பவனே வீண்பிள்ளை
சந்திரசடாட்சர சங்கரனேயென்று
சாற்றித்திரிந்தவ னாண்பிள்ளை
நிதம் போற்றித்திரிந்தவ னாண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மட மாதர்கள்மையலால்
சோர்வுற்றலைந்தவன் வீண்பிள்ளை
மெய்யடியார்களைக் கண்டேயடிபணிந்து
மேவிநடப்பவ னாண்பிள்ளை
மலர் தூவிவிடுப்பவ னாண்பிள்ளை
வையகமீதினில் வீணரைக்கூடி
மதிகெட்டலைபவன் வீண்பிள்ளை
சத்திரஞ்சாவடி சாலைகள்சோலைகள்
தானமைத்திட்டவ னாண்பிள்ளை
கொடுங்கான்திரிந்திட்டவ னாண்பிள்ளை
சித்திரவிலைமாதர்கள் மெச்சிடமேடைகள்
செம்பொனளித்தவன் வீண்பிள்ளை
தேவாலயங்களுந் திகழ்மாடங்களுங்கண்ட
தேசங்கள்திரிந்தவ னாண்பிள்ளை
நல்லோர்கள்வாசங்கள்புரிந்தவ னாண்பிள்ளை
பாவாணர்களுக்குப் பத்தர்க்குமாலைசொல்லி
பலகால்திரியச்செய்தோன் வீண்பிள்ளை

ஆண்பிள்ளைவீண்பிள்ளைச்சிந்து - முற்றிற்று.

கடவுள் துணை.

# மண்டலத்துமானிடர் மதியைமயக்கும்

# விலைமாதர் கும்மி.

——(*)——

## (முற்பாதி.)

திருச்சிறந்திடும் பெண்களிலேசிலர்
சீர்கேடுசெய்வதால் மண்மீதிலே
விரும்புமானிடர்க் கும்மிசொல்லச்சித்தி
விநாயகன்பொற்பாதங் காப்பாமே. 1

வாலவயதினில் புத்தியில்லாமலே
மங்கையர்மோகத்தில் வீழாமலே
வாலிபர்கண்டு தெளியவேகும்மி
வழங்கினேன்கண்டறி மானிடனே. 2

மாதர்வலைக்குள்ளே சொல்லாதேகெட்ட
வார்த்தைகளைப்பேசி வெல்லாதே
பாதகிதோதகி போதனைகளெல்லாம்
பகருவேன்கேட்பாயே மானிடனே. 3

உண்மையுங்கற்பையுங் காத்துநடக்கின்ற
உத்தமமாதரை நீக்கிக்கண்டப்
புண்ணாகிப்பொல்லாத ரோகைத்தருகின்ற
பொய்க்குழலோடாதே மானிடனே. 4

கூழுக்குப்பில்லாத பாதகியுங்கஞ்சி
குடிக்கவோடில்லா மூதேவியும்
தாழப்படுத்து முருண்டவளுமிக்கச்
சண்டியுங்கள்ளியும் மானிடனே. 5
அங்காடிவிற்றே யலைந்தவளுஞ்சுப்பல்
அள்ளிதலைமொட்டை யானவளும்
பங்கமாய்க்காது மறுந்தவளும்தலை
பம்பையும்தொம்பையும் மானிடனே. 6
மஞ்சள்குளித்து மினுக்கிடுவாள்மிக
மணங்கள்பூசிக் குலுக்கிடுவாள்
கொஞ்சியேமுத்தந் தந்திடுவாள்கெட்டக்
கொள்கையைக்கண்டறி மானிடனே. 7
மல்லிகைமுல்லை யணிந்திடுவாள்வறு
வட்டமாய்ப்பொட்டுமே யிட்டுக்கொள்வாள்
மெலியசல்லா வுடுத்திக்கொள்வாள்மிக
வேடிக்கைகாட்டுவாள் மானிடனே. 8
கஸ்தூரிகுங்குமப் பொட்டிடுவாள்பொல்லா
காசிமேலாசையாய்ச் சேர்ந்திடுவாள்
அஸ்தங்கள்வீசி நடந்திடுவாள்சற்றும்
ஆருக்குமஞ்சிடாள் மானிடனே. 9
கொங்கைமறைய ரவிக்கைசேர்ப்பாள் மயிர்க்
கோணினல்கூந்தலின் சிக்கறுப்பாள்
சங்கமில்லாமலே கோடாலிமுடியைச்
சம்பிரமாய்ப்போடுவாள் மானிடனே. 10

பல்லுக்குப்பற்கறை தீட்டிக்கொள்வாள்மிக
பாக்குவெற்றிலையும் போட்டுக்கொள்வாள்
சொல்லுக்குசொல்லு சிரித்திடுவாளுன்னை
சுத்துவாள்நத்துவாள் மானிடனே. 11
கண்ணுக்குமைகள் தீட்டிக்கொள்வாள்கையில்
காலில்மருதோன்றி பூசிக்கொள்வாள
எண்ணும்கருத்தை முடித்துக்கொள்வாள்நீ
ஏங்கித்திரிவாய் மானிடனே. 12
அம்மாள் அக்காளென்று கூப்பிடினும்பாவி
அண்டிப்பரிகாசஞ் செய்திடுவாள்
சும்மா அடிக்கடி வந்திடுவாளுன்னை
தொல்லைக்குளாக்குவாள் மானிடனே. 13
மாராப்புசீலைநழுகவிட்டுக் கொங்கை
வளத்தைக்காட்டியே சைகைசெய்வாள்
சீராளவர்வந்தால் வெட்கித்ததுபோல்
சீலையையிழுப்பாள் மானிடனே. 14
காட்டானைசிங்கம் கரடிபுலிநாகம்
கள்ளர்குறவரை நம்பிடலாம்
பூட்டகமுள்ளவிம் மாதரைநம்பினால்
போகுமோபாக்கியம் மானிடனே. 15
தம்பிவண்ணனென்று கூப்பிடுவாள்பொழு
தந்திபட்டாற் புருஷனென்பாள்
நம்பிப்பணத்தைக் கொடுக்காதேகெட்ட
நாரியைநம்பாதே மானிடனே. 16

கைவசமாக்க மருந்திடுவாள் மிக்க
காமங்கொண்டதாய் நடித்திடுவாள்
பையவேகாசை பிழுத்துப்பிணமாக்கும்
பட்டிக்குத்தப்புவாய் மானிடனே. 17
செத்தால்பிரிவேனேயல்லாமல் உன்னைச்
சேர்ந்துசுகம்வேறு வேண்டேனென்பாள்
எத்தாகப்பேசியே கொள்ளையடிப்பாளே
ஏமாந்துபோகாதே மானிடனே. 18
காலைவலிக்குதெனவுரைத்தால் அத்தான்
கண்ணூருவென்றே யழுதிடுவாள்
மாலைபொழுதில் மினுக்கிப்பிறரை
மயக்கவேபார்ப்பாளே மானிடனே. 19
என்றனைவிட்டுநீர் வேறொருமாதரை
எண்ணவும்போகவுங் கூடாதென்பாள்
உன்றனைவிட்டுக் கனவிலும்மற்றோரை
உன்னேனென்பாள் மானிடனே. 20
பாடுபட்டுத்தினம் சேர்த்தபணமெல்லாம்
பாதகிமையலில் சிக்கிக்கொண்டால்
கூடுமொழிதப்பி போடாவாடாவென்று
கூசாமல்பேசுவாள் மானிடனே. 21
பணமுள்ளவனைத் தேடுவளேகுஷ்ட
பறையனாகிலுங் கூடுவளே
பிணங்கள்கூடவுஞ் சேருவளேபொல்லா
பேச்சியைக்கண்டறி மானிடனே. 22

எங்கெங்கும்மாப்பிள்ளை வைத்திருப்பாளவள்
ஏனென்று கேட்கவுங்கூடாது
மங்கையிடம்நீதி பேசக்கண்டாலுன்னை
மாட்டுவாளோட்டுவாள் மானிடனே. 23
வேசிக்குக்காசுமே லாசையல்லால் நல்ல
மேன்மைப்புருஷர்மே லாசையில்லை
தோசிமேலாசை புருஷற்குண்டுவீணில்
தொல்லைப்படுவாரே மானிடனே. 24
அற்பசுகத்திற்கே யாசைப்பட்டுவீணில்
ஆஸ்தியெல்லாமையோ தோர்த்துவிட்டு
அற்பனைப்போலே யலைந்துழலுவது
மறிவோகண்டறி மானிடனே. 25
எட்டிப்பழமப்பா விம்மாதராசைகள்
எண்ணிப்பார்த்தால்மிகச் சள்ளையப்பா
விட்டுப்பிரியாக் கலியாணமாதரை
மேவுவாய்சற்புத்திர மானிடனே. 26
அக்கரையிக்கரை பச்சையென்றேஆடு
அங்குமாயிங்குமா யோடுதல்போல்
தக்கப்பணமுள்ள பேர்களையேய்த்திடும்
சண்டாளியைத்தள்ளுவாய் மானிடனே. 27
பல்லுவிழுந்தகிழவி ஐயோசிறு
பையனைமாப்பிள்ளை யாகக்கொண்டு
அல்லும்பகலும் சிங்காரஞ்செய்கின்றதை
அறியாயோநீதானு மானிடனே. 28

பாவிலேசத்தியம் செய்திடுவாள் உண்ணும்
பருக்கைமீதி லடித்திடுவாள்
கோவிலில்சென்று முறுதிசொல்வாளதைக்
கொஞ்சமும்நம்பாதே மானிடனே. 29
கம்மல்ஜிமிக்கையும் வேணுமென்பாள்பீலி
காலாழிகாப்புகள் வேணுமென்பாள்
திம்மலாயட்டிகை வேணுமென்பாளதைச்
செய்யாவிடிலுண்ணாள் மானிடனே. 30
கண்டசரம்வில்லைத் தாயத்துராக்கடி
கனத்தசரம் ஆரம்சுட்டி
தண்டைகள்கொலுசுகள் வேணுமென்பாளதைத்
தாராவிடில்பழி மானிடனே. 31
அண்டாவுஞ்செப்புக் குடங்களென்பாள் அதை
அல்லாமல்செப்புத் தவலையென்பாள்
குண்டான்றாக்குச் சட்டிலோட்டாவுடன்
குத்துவிளக்கென்பாள் மானிடனே. 32
வாங்கியேகடன் தீராவிட்டால்ஐயோ
வாரண்டுஞ்சம்மனும் வந்துவிட்டால்
பாசாங்குசெய்வாளென் றெண்ணுவாயேயுன்றன்
படுக்கையைக்காட்டுவாள் மானிடனே. 33
காசும்புகழையும் தோர்த்துவிட்டுப்பருங்
கட்டியும்புண்ணையும் வாங்கிக்கொண்டு
நாசமடையவே பாராதேயெந்நாளும்
நல்வழிச்சாருவாய் மானிடனே. 34

நீர்கடுப்புவெள்ளை கண்டிடுமேக
நெஞ்செல்லாம்வற்றி யுலர்ந்திடுமே
பார்மீதில்குடிச்சக் காரிகளின்பாசத்தை
பாழாக்குவாய்திவ்ய மானிடனே. 35

நம்மைவிட்டு மகலாதிருப்பாள் அவள்
நாடெங்குமாப்பிள்ளை வைத்திருப்பாள்
இந்திரஜாலமடுத்தவர்க் கெப்போதும்
ஏமாந்துபோகாதே மானிடனே. 36

வாங்கள்போங்களென்று பேசிடுவாள்பணம்
வந்தமட்டுங்கையில் தட்டிக்கொள்வாள்
தூங்கடாமேஞ்சாதிப் பையலேமிகு
சோம்பனேயென்பாளே மானிடனே. 37

மூத்தவளோடுநீசேராதே பொல்லா
மூதேவி தானுந் தொடர்ந்துக்கொள்வாள்
ஆத்திரங்கொண்டுநீ பேசாதேயுன் றன்
ஆயுளுங்குன்றுமே மானிடனே. 38

தாய்போலமாதரைத் தேடாதேதம்பி
தமையன்பெண்டோடுநீ சேராதே
நாய்போலகாடியலையாதே பொல்லா
நமன்செண்டாடுவான் மானிடனே. 39

முண்டைகளோடுநீ கூடாதேகூடில்
முன்னில்லாளெதிரிற் சீதேவி
கண்டவிடமெல்லாம் போகாதே போனால்
கண்டதைப்பேசாதே மானிடனே. 40

மாதர்கள்பேச்சைநீ கேளாதேகேட்டு
மண்ணிலலேந்தார் பலருமுண்டு
சீதையின்சொல்லாலே ராமன்பின்னேகி
செய்ததுகண்டறி மானிடனே. 41

சந்திரன்கெட்டதும்பெண்ணாலே தேவர்
தாருகாவிண்டதும் பெண்ணாலே
இந்திரன் திரேகம் முழுதுவின்னமாய்
எய்ததும்பெண்ணாலே மானிடனே. 42

மாதர்நடக்கையை சொன்னதுமல்லால்
வந்திடும்தீங்கையும் நன்குரைத்தேன்
பாதகியாசையை நீக்கிசிவஸ்துதி
பண்ணுவாயெப்போதும் மானிடனே. 43

பாவிக்கழிக்கும்பொருளையெல்லாஞ்சேர்த்து
பாதையில்மடமு மில்லாமல்
கோவில்குளங்களைச் செய்துவித்தால்யாருங்
கொண்டாடுவாரோசொல் மானிடனே. 44

## விலைமாதர்கும்மி

முற்றிற்று.